# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-45000032, 9677048718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com
இணையதளம் : bankubeutn.in


சுற்றறிக்கை எண்:124:2023 21.09.2023

அன்பார்ந்த தோழர்களே !

## துணைநிலை ஊழியர்களுக்கு பதவி உயர்வு

நமது அகில இந்திய அமைப்பிற்கும், நிர்வாகத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், துணைநிலை ஊழியர்களிலிருந்து, எழுத்தர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கான நடைமுறையை நிர்வாகம் துவக்கியுள்ளது.

அகில இந்திய அளவில் 286 பணியிடங்கள் பதவி உயர்வுக்காக கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்த அளவில், 19 பணியிடங்கள் பதவி உயர்வுக்காக கண்டறியப்பட்டுள்ளன.

| இனம் (category) | பட்டியல் வகுப்பினர் | பட்டியல் பழங்குடியினர் | பொது | மொத்தம் |
|---|---|---|---|---|
| பணிமூப்பு அடிப்படையில் | 2 | - | 7 | 9 |
| தகுதி அடிப்படையில் | 2 | - | 8 | 10 |
| மொத்தம் | 4 | - | 15 | 19 |
| பணிமூப்பு அடிப்படையில் ஒரு இடம் மாற்றுத்திறனாளி (orthopedically handicapped) ஊழியருக்கும், தகுதி அடிப்படையில் ஒரு இடம் பார்வை குறைபாடுடைய ஊழியருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. | | | | |

விண்ணப்பங்கள் பிராந்திய அலுவலகங்களில் 30.09.2023க்கு முன்பாக சமர்ப்பிக்கப்படவேண்டும். ஊழியர்களின் கல்வி, பிற தகுதிகள் 01.09.2023 அன்று உள்ளபடி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

மூன்று ஆண்டுகள் பணியாற்றிய அனைத்து தோழர்களும், பணிமூப்பு அடிப்படையிலான பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கலாம். அவர்களில் பணிமூப்பு அடிப்படையில் 18 பேர் மட்டுமே தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். பகுதி நேர

ஊழியர்களாக பணியாற்றிய காலமும் விகிதாச்சாரமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

பணிமூப்பு அடிப்படையில், 6 நாட்கள் பயிற்சி வழங்கப்படும். அதன் பின் அவர்களுக்கு 80 மதிப்பெண்களுக்கு ஒரு எழுத்துத் தேர்வு நடத்தப்படும். அதில் வெற்றி, தோல்வி இல்லை. அனைத்து தோழர்களும் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். அதற்கு 20 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

பொதுப் பட்டியலில் உள்ள தோழர்கள் குறைந்தபட்சம் 30 மதிப்பெண்களும், பட்டியலின தோழர்கள் 25 மதிப்பெண்களும் பெற்றால், அவர்கள் பணிமூப்பு அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு, பதவிஉயர்வு வழங்கப்படும்.

2 ஆண்டுகள் பணியாற்றிய 10ஆம் வகுப்பு தேறிய தோழர்களும், 5 ஆண்டுகள் பணியாற்றிய 7ஆம் வகுப்பு தேறிய தோழர்களும், 10 ஆண்டுகள் பணியாற்றிய கல்வி தகுதி இல்லாத தோழர்களும் தகுதி அடிப்படையிலான தேர்வில் கலந்துகொள்ளலாம்.


தகுதி அடிப்படையிலான தேர்வு “Clerical Aptitude, Elementary Banking Knowledge, Computer Literacy” ஆகிய பாடத்திட்டங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வில் வெற்றிபெறும் தோழர்களுக்கு 10 மதிப்பெண்களுக்கு நேர்காணல் நடைபெறும். அவர்கள் பணியாற்றிய காலத்திற்கு ஏற்ப 15 மதிப்பெண்கள் வரை வழங்கப்படும்.

எழுத்துத் தேர்வு, நேர்காணல், பணிக்கால மதிப்பெண்கள் ஆகியவை கூட்டப்பட்டு, மதிப்பெண்களின்படி வரிசைப்படுத்தப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படும். தகுதி அடிப்படையிலான தேர்வு தற்காலிகமாக 09.12.2023 அன்று நடைபெறுவதாகவுள்ளது.

## சிறப்பு பயிற்சி வகுப்புகள்

தகுதி அடிப்படையிலான தேர்வுக்கு முதல் நாள், அதாவது 08.12.2023 (வெள்ளிக் கிழமை) அன்று சங்கத்தின் சார்பில் ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் சென்னையில் நடைபெறும். பட்டியலின, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வங்கி பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளது. அதனைப் பொருத்து, நடைபெறும் இடம் குறித்த தகவல் தெரிவிக்கப்படும்.

இந்தப் பதவி உயர்வுத் தேர்வில் கலந்துகொள்ளும், தகுதி வாய்ந்த தோழர்கள் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.



(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்